# தமிழ்நாடு அரசு

## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை –600 006

## எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு, ஜனவரி 2017

## தனித்தேர்வர்களுக்கான தக்கல் திட்டம்

## செய்திக்குறிப்பு

1. **ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்றல்**

ஜனவரி2017–ம் ஆண்டில் நடைபெறவுள்ள தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு ஏற்கனவே விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு தட்கல் திட்டத்தின் கீழ் 05.12.2016 முதல் 07.12.2016 வரை விண்ணப்பிக்கலாம் என 02.12.2016 அன்று இவ்வலுவலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்காண் தேர்விற்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் 08.12.2016 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**01.01.2017**அன்று 12 1/2 வயது பூர்த்தி அடைந்த தனித் தேர்வர்கள் தக்கல் திட்டத்தின்மூலம் **08.12.2016 வரை** www.dge.tn.gov.inஎன்ற இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள சேவை மையங்களுக்கு (Nodal Centre) சென்று on line மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

2. **தேர்வுக் கட்டண விவரம்**

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் ரூ.125/–+சிறப்புக்கட்டணம் ரூ.500/– (அரசாணை எண்.19, பள்ளிக்கல்வித்துறை, நாள்:13.02.2003) மற்றும் ஆன்லைன் மூலம் விண்ணப்பத்தினைப் பதிவு செய்யும் கட்டணம் ரூ.50/– மொத்தம் ரூ.675/–ஐ தனித்தேர்வர்கள் சேவை மையங்களிலேயே நேரடியாக செலுத்தலாம்.

3. **விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டியவை**

**1. முதன்முறையாக தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்:**

(அ) விண்ணப்பதாரர்கள் ஆன்லைன் விண்ணப்பத்துடன் தங்களது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நகல் / பதிவுத்தாள் நகல் / பிறப்புச் சான்றிதழ் நகல் இவற்றில் ஏதேனும் ஒன்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**2. ஏற்கனவேஎட்டாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி தோல்வியடைந்த பாடத்தை தேர்வெழுத விண்ணப்பிப்பவர்கள்:**

(அ)ஏற்கனவே தேர்வெழுதி பெற்ற மதிப்பெண் சான்றிதழின்/சான்றிதழ்களின் நகல்களை கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

- வ.எண்.1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்ட தனித்தேர்வர்கள் ரூ.40/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட, சுயமுகவரியிட்ட உறை ஒன்று விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. ஆன்லைன் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. இத்தேர்விற்கான விரிவான தகவல்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

6. ஆன்லைன் விண்ணப்பங்களை தேர்வர்கள் **08.12.2016 அன்று மாலை 5.00 மணி வரை**சேவை மையங்களில் பதிவு செய்யலாம்

**சென்னை–600 006**
**நாள்: 07.12.2016**

ஒம்/–

**இயக்குநர்**